Judicial Form No.53
( See Rule 42 )
DEPOSITION OF WITNESSES
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE No.I. TIRUPATTUR
Case No. CC .NO. 118/2023
DEPOSITION OF PROSECUTION SIDE EVIDENCE No.08 , Page.No.81/23

| | | | |
|---|---|---|---|
| பெயர் | திருமதி. ேஹமாவதி | | |
| தந்தை/கணவர் பெயர் | திரு. வீரசிவாஜீ | தொழில் | காவல் ஆய்வாளர் |
| கிராமம் | திருப்பத்தூர் | மதம் | |
| மாவட்டம் | திருப்பத்தூர் | வயது | 46 |
| எதிரி மனுவின் பேரில் ஆஜரில்லை | | | 1 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 ( Central Act 44 of 1969 ) on the 16th day of June 2026.

சாட்சி ஆஜர் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.

**<u>அ..சா.08 திருமதி. ேஹமாவதி முதல் விசாரணை</u>**

நான் தற்போது திருவண்ணாமலை கிராமிய காவல் நிலைய ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். கடந்த 2023ம் வருடம் திருப்பத்தூர் நகர காவல் ஆய்வாளராக பணியில் இருந்த போது உதவி ஆய்வாளர் திரு. கணேசன் என்பவர் பதிவு செய்திருந்து குற்ற எண். 1342/2020 வழக்கினை காவல் ஆய்வாளர் திருமதி. பேபி என்பவர் புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு 04.07.2020 அன்று சம்பவ இடம் சென்று சாட்சிகள் ர்பான் மற்றும் சுகேல் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைப்படம் தயார்செய்துள்ளார். **( அவை முறையே அ.சா.ஆ. 09, 10 ஆக குறியீடுசெய்யப்படுகிறது)** பின்னபு

இவ்வழக்கு சாட்சிகளை தனித்தனியாக விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தார். மேலும் அவரது விசாரணையில் இச்சம்பவம் உண்மை என தெரியவர இவ்வழக்கின் 3 முதல் 5 எதிரிகளை 27.07.2020 அன்று காலை 10.00 மணிக்கு திருப்பத்தூர் ஆசிரியர் நகர் பேருந்து நிறுத்தத்தில் வைத்து காரணம் கூறி கைது செய்து நீதிமன்றகாவலுக்கு உட்படுத்தினார். பின்னர் வழக்கு கோப்பை மேல் விசாரணைக்கு என் வசம் ஒப்படைத்தார். இவ்வழக்கை விசாரணைக்கு எடுத்துக்கொண்ட நான் புலன் விசாரணை மேற்கொண்டு எதிரிகள் மீது இதச பிரிவுகள் 363, 323 கீழ் இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**குறுக்கு விசாரணை**

அ.சா.1 கொடுத்த பொய்யான புகாரை பெற்ற உதவி ஆய்வாளர் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார் என்றாலும் நான் சரிவர புலன் விசாரணை செய்யாமல் எதிரிகள் மீது தவறாக இறுதிஅறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. இவ்வழக்கு ஆவணங்கள் அனைத்தும் காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டன என்றாலும் எதிரிகளுக்கும் இவ்வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றாலும் சரியல்ல.

//**உண்மை நகல்**//

KODHAVADI SUBRAMANIAN DINESH

Judicial Magistrate No.I Tirupattur
Digitally signed by KODHAVADI SUBRAMANIAN DINESH
Location: Tirupattur

**நீதித்துறை நடுவர் எண். 01**
**திருப்பத்தூர்.**